©
தமிழ்நாடு அரசு
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 10] சென்னை, புதன்கிழமை, மார்ச் 11, 2026
மாசி 27, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### இயற்கை வளங்கள் துறை

### அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண். 02, இயற்கை வளங்கள் (MMC.1)த் துறை, 19 ஜனவரி 2026.]*

1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்) சட்டத்தின், மத்தியச் சட்டம் 67/1957) 15 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிமச் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். அவையாவன;

### திருத்தங்கள்

மேற்சொன்னவிதிகளில், விதி 12 இல், துணை விதி (2A)–,இல்–

(i) பகுதி (a)–இல், "விண்ணப்பக் கட்டணம் ரூ.1,500/" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "விண்ணப்பக் கட்டணம் ரூ.5,000/– மற்றும் பிணை வைப்புத்தொகையாக விண்ணப்பிக்கப்பட்ட கனிமத்தின் அளவிற்குச் செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டணத்தின் இரண்டு மடங்குக்குச் சமமான தொகையளவிளான திருப்பியளிக்கத்தக்க வைப்புத்தொகை" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்:

(ii) பகுதி (e) இல், பின்வரும் சொற்றொடர் இறுதியில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:

"ஒருவரின் விண்ணப்பம் மாவட்ட ஆட்சியரால் நிராகரிக்கப்பட்டிருக்குமாயின் அல்லது வேறொருவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்குமாயின், அத்தகைய நபர் செலுத்திய பிணை வைப்புத்தொகையை மாவட்ட ஆட்சியர் உடனடியாகத் திருப்பியளிக்க வேண்டும்."

(iii) பகுதி (h) க்கு பதிலாக, பின்வரும் பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

"(h) யாதொரு நேர்விலும், அனுமதி பெற்றவர், அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாகக் கனிமங்களை அகற்றியிருப்பது கண்டறியப்படுமாயின் அல்லது அனுமதி வழங்குவதற்கான நிபந்தனைகளை ஏனைய யாதொரு வகையில் மீறியிருப்பது கண்டறியப்படுமாயின், மாவட்ட ஆட்சியர், அவர் தரப்பு வாதத்தை முன்வைப்பதற்கு நியாயமான வாய்ப்பொன்றை வழங்கிய பின்னர், அனுமதியை ரத்து செய்வதுடன், உரிமக் கட்டண வேறுபாட்டுத் தொகை மற்றும் வெட்டியெடுக்கப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட கனிமங்கள் அளவிற்கு அனுமதிபெற்றவரால் செலுத்தப்பட வேண்டிய கனிமத்தின் செலவுத்தொகை, கண்மாய், அணுகுச் சாலை முதலியவற்றில் சேதங்கள் ஏதேனும் ஏற்பட்டிருப்பின், அவற்றிற்கான செலவுத்தொகையுடன், கண்மாய்களுக்கு ஏற்பட்ட சேதத்தின் அளவைப் பொறுத்து, அனுமதி பெற்றவரின், பிணை வைப்புத்தொகையிலிருந்து வசூலிக்கப்படும். கண்மாய்களைச் மறுசீரமைப்பதற்காக ஏற்படும் யாதொரு செலவும் பிணை வைப்புத்தொகையிலிருந்து வசூலிக்கப்படும்:

இருப்பினும், அத்தகைய வேறுபாடு பிணை வைப்புத்தொகையை விட அதிகமாக இருப்பின், 1890–ஆம் ஆண்டு வரி வசூல் சட்டத்தின் (மத்திய சட்டம் 1890) கீழ் அனுமதி பெற்றவரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும்".

(iv) அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட பகுதி (h)–க்குப் பின்னர், பின்வரும் பகுதி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"(i) அனுமதி வழங்கும் ஆணையில் அனுமதிக்கப்பட்ட அனுமதிக் கால அளவு முடிவடைந்தவுடன் அல்லது அனுமதிக்கப்பட்ட அளவு நிறைவடைந்தவுடன், இவற்றில் எது முந்தையதோ, அத்தகைய கால அளவிற்குப் பின்னர், தொடர்புடைய புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் உதவி இயக்குநர் அனுமதிக்கப்பட்ட பகுதியை ஆய்வு செய்து, அனுமதி வழங்குவதற்கான நிபந்தனைகளுக்கு இணக்கமாக உள்ளதா என்பதைச் சரிபார்ப்பார். மேலும், அனுமதி பெற்றவர் அனைத்து நிபந்தனைகளுக்கும் முழுமையாக இணங்கியுள்ளார் என்று அவர் மனநிறைவடைவாராயின், இது தொடர்பான அறிக்கையை தொடர்புடைய மாவட்ட ஆட்சியருக்கு அனுப்புவார். மாவட்ட ஆட்சியர் அத்தகைய அறிக்கையைப் பெற்றவுடன், எழுத்துப்பூர்வமாகப் பிறப்பிக்கப்பட்ட ஆணை வாயிலாக, அனுமதி வைத்திருப்பவருக்கு பிணை வைப்புத்தொகையை திருப்பியளிப்பார்.".

**சுஞ்சோங்கம் ஜாதக் சிறு,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.(முகூபொ)*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி மொழிபெயர்ப்புத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.